**தலைப்பு 209 – தேசிய சுவடிக் காப்புத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மறறும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாரள் நாயகத்தின் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **முன்னைய வருடத்தின் பந்தியின் தொடர்பு** | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1.6.1.1(அ) | தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்திற்கு உரிய புத்தகங்கள், பதிவேடுகள் பழைமையான உடன்படிக்கைகள் மற்றும் இரகசிய பதிவேடுகள் போன்ற விலை மதிப்பிட முடியாத பாரம்பரிய சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லையெயன்பதுடன் அந்த பாரம்பரிய சொத்துக்கள் பல ஆண்டுகளாக முறையாக கணக்கெடுப்பொன்றிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது. | இந்த சொத்துக்களை கணக்கெடுப்பொன்றிற்கு உட்படுத்துவதற்கு மற்றும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமானங்களற்ற பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர் கடன் மீதி தலைப்புக்களுக்கிடையில் மாற்றும் போது கடன் மீதியை சரியாக இனங்கண்டு மாற்றாததன் காரணமாக ரூபா 120,202 கூட்டுமொத்தம் தீர்க்கப்படாமல் நிலுவைக் கடன் மீதியொன்று மேலும் காணப்பட்டது. | இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர் கடன் மீதியை இனங்காணும் போது பிழையொன்று நேர்ந்துள்ளது. மாற்றுப் பதிவின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இந்த நிலுவை கடன் மீதியை அறவிட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

#### (ஆ) மீண்டெழும் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலே நிதிக்கூற்றின் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் செலவுக் கூற்றின் உதவி வட்டி மற்றும் மாற்றீடுகளின் மதிப்பிடப்பட்ட தேறிய ஏற்பாடு மற்றும் உள்ளபடியான செலவுகளின் மொத்தம் முறையே ரூபா 1,038,000 மற்றும் ரூபா 888,838 ஆக இருப்பினும் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் முறையே ரூபா 300,000 மற்றும் ரூபா 387,691 ஆக பதியப்பட்டதனால் உதவி வட்டி மற்றும் மாற்றிடுகள் முறையே ரூபா 738,000 வினாலும் ற்றும் ரூபா 501,147 வினாலும் குறைத்து பதியப்பட்டிருந்தது. | அச்சுப் பிழையொன்றினால் 05 ஆம் இலக்க குறிப்பின் கீழ் உள்ளடக்கப் பட்டிருந்ததுடன் அதன் காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் முழுமையான மீண்டெழும் செலவினங்களின்பால் எவ்விதத்திலும் குறைப் பாதிப்பொன்று இடம்பெற்றிருக்க வில்லை. | சரியான நிதிக்கூற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(இ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கின் இணக்கக் கூற்றின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி நிலுவைக் கடன் மீதியின் மொத்தம் ரூபா 17,672,837 ஆக காணப்பட்டதுடன், அத்தினத்தில் நிதி நிலைமை தொடர்பான கூற்றின் பிரகாரம் அந்த மீதியின் மொத்தம் ரூபா 18,114,012 காணப்பட்டதனால் ரூபா 441,175 வேறுபாடு காணப்பட்டது. | கைத்தவறுதலாக சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும். |

**(ஈ) வைப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டிற்குள் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 569,562 ஆன காலாவதியான வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப் பெறுமானம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 02 கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய வைப்புக்களை தீர்ப்பதற்கு நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வைப்புக்கள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ii) | 2016 ஏப்ரல் 11 ஆந் திகதிய 249/2016 ஆம் இலக்க அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் திறைசேரி பொது வைப்புக் கணக்கின் மீதியை இணக்கக் கூற்றுடன் காலப்பகுப்பாய்வு அறிக்கையொன்றை தயாரித்து திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டுமெனினும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் அந்த அறிக்கையை அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | உரிய அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. | அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டாலும், கணக்காய்வு பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**(உ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள புதிய மற்றும் பழைய கட்டிடங்கள், கண்டியில் அமைந்துள்ள கட்டிடம், பழைய சிற்றுண்டிச்சாலை கட்டிடம் மற்றும் அங்கு நிறுவப்பட்டுள்ள மத்திய வளிப்பதனாக்கி முறைமை உள்ளடங்கலாக அனைத்து நிதிசாரா சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் ஆதனப் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் மதிப்பிடப்பட்டு கணக்கிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை | காணியின் உரிமையை பெற்றுக் கொள்வதற்காக பிரதேச செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஆதனத்தை உரிமையாக்கி மதிப்பீட்டை மேற்கொண்டு கணக்கிற்கு உட்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளேன். | ஆதனத்தை உரிமையாக்கி மதிப்பீட்டை மேற்கொண்டு கணக்கிற்கு உட்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டிலே நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்துக்களின் மீதிகளை குறிப்பிடும் போது கூட்டுமொத்த ரூபா 5,164,870 ஆன நிர்மாண உபகரணங்கள், தொழில்நுட்ப மற்றும் உற்பத்தி உபகரணங்களாகவும், கூட்டு மொத்த ரூபா 446,229 ஆன ஒலிபரப்பு உபகரணங்கள், நிர்மாண உபகரணங்களாகவும், ஒலிபரப்பு உபகரணங்களுக்கு பெறுமதியொன்று இல்லாததாகவும் பிழைகளுடன் கணக்கிடப்பட்டிருந்தது. | இது அச்சில் ஏற்பட்ட பிழையொன்றென்பதுடன் ஒட்டுமொத்த சொத்துக்களுக்கு எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை. | சரியான நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | திணைக்களத்தின் பிரதான அலுவலக கட்டிடம் அமைந்துள்ள திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் கோட்டத்தில் | பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணித்துண்டை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் | காணியை சுவீகரித்து கணக்கிற்கு உட்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கருவாத்தோட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மு.பி.கொ. 9582 காணித்துணடு இலக்கம் 01 ஐ உடைய காணித் துண்டை சுவீகரித்து நிதிக் கூற்றுக்களில் மதிப்பிட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை | இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. | |

**(ஊ) கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றிதழ்**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டுமெனினும் அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்துப் பேணப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த பட வேண்டுமென்பதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையின் ஆக்கபூர்வமாக வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயினும் அம்மீளாய்வை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அதன்படி உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்து உரிய அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். | 2018 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

(எ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | | |
| (i) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2000 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் வழிகாட்டி இலக்கம் 01 (உ) பிரிவு | சேவையை விட்டுச் சென்ற 04 உத்தியோகத்தர்களுக்கு உரிய 05 வருடங்களுக்கு அதிக காலம் பழைமையான ரூபா 264,875 நிலுவைக் கடன் மீதியை தீர்ப்பத்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மிகவும் பழைமையான மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சுற்றுநிருபத்தின் அறிவுரைகளின் பிரகாரம் பழைமையான கடன் மீதி தீர்க்கப்பட வேண்டும். |
| (ii) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி 02/2020 அரச நிதிச் சுற்று நிருபத்தின் 10.2 ஆம் பந்தி மற்றும் வழிகாட்டி இலக்கம் 14 | திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் வரைபை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. | செயலாற்றல் அறிக்கையின் வரைபை அவசரமாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கின்றேன். | சுற்றுநிருபத்தின் அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டெழும் மற்றும் மூலதன செலவு விடயங்கள் 11 இற்கான தேறிய ஏற்பாடுகள் முறையே ரூபா 5,469,415 ஆகவும், மற்றும் ரூபா | மார்ச் மாதத்திலிருந்து கொவிட் தொற்று நிலைமையின் காரணமாக செலவுகள் ஏற்படாமை. | வருடத்திற்கான போதுமான ஏற்பாடுகளை மதிப்பிடுதலுக்கு |

| | | |
|---|---|---|
| 47,457,241 ஆகவும் வேலைகளுக்காக உபயோகிக்கப்படாமல் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த சேமிப்பு வருடாந்த தேறிய ஏற்பாட்டில் நூற்றிற்கு 29 இலிருந்து நூற்றுக்கு 100 வரையான எல்லைக்குள் காணப்பட்டது. | | உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

## 2.2 முற்பணங்களை விநியோகித்தலும் அறவிடுதலும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதியின் மொத்தம் ரூபா 243,816 தொகை 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி மற்றும் 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபம் மற்றும் வழிகாட்டி இலக்கம் 01 இன் பிரகாரம் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நினைவூட்டுதலை மேற்கொண்டு அறவிடுவதற்கு அல்லது சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | இந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.3 வங்கிக் கணக்குச் செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வங்கியில் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்த 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் 06 மாதங்களை விட அதிக காலாவதியான மொத்த ரூபா 182,601 பெறுமதியான 14 காசோலைகள் தொடர்பாக 396(ஈ) நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 3.1 பெறுகைகள்

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------- | -------------------------------- | ------------------------ |
| (அ) 2020 ஆம் ஆண்டின் பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகைகளுக்காக அனைத்து பாதிடப்பட்ட செலவுகளின் மொத்தம் ரூபா 236,823,000 ஆக காணப்பட்டதுடன் வருடத்திற்குள் பெறுகைகள் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட உள்ளபடியான செலவு ரூபா 26,630,000 ஆகும். அதன்படி வருடத்திற்குள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிறைவேற்றப்படாத பெறுகைகள் நடவடிக்கைகளின் நிதிப் பெறுமானம் ரூபா 210,193,000 ஆகும். | நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை காரணமாக எதிர்பார்த்த இலக்கை அண்மிப்பதற்கு முடியாது போனது. | வருடத்திற்குள் அண்மிக்க முடியுமான மட்டத்தை கருத்திற் கொண்டு திட்டத்தை தயாரிப்பதற்கு மற்றும் திட்டத்தின் அவசியத் தன்மையின் பிரகாரம் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) திணைக்களத்தின் பிரதான அலுவலக கட்டிடத்தை திருத்தங்கள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 992 மில்லியன் பெறுமதிக்கு அ.ப/17/2988/742/050 ஆம் இலக்கமுடைய மற்றும் 2018 சனவரி 17 ஆந் திகதிய அமைச்சரவை நியமித்த நிலையான பெறுகைகள் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் பொறியியல் விடயங்கள் தொடர்பாக மத்திய மதியுரைப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த கட்டிடத்தின் புனர்நிர்மாண மற்றும் மேலதிக | | |

| | | | |
|---|---|---|---|
| | முன்னேற்றம் தொடர்பான பரீட்சித்தலின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | கட்டிட திருத்த வேலை நடவடிக்கைகள் நிறைவு செய்வதற்கு இருந்த திகதி 2020 யூலை 07 ஆந் திகதியாக இருப்பினும் 2021 மே 18 ஆந் திகதி வரை ஒப்பந்தக்காலம் நீடிக்கப்பட்டிருந்தது. ஏப்ரல் 01 ஆந் திகதியில் கட்டிட திருத்த வேலை நடவடிக்கைகளின் நிகழ்கால பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 46 சதவீதமாக காணப்பட்டதுடன் அதன் நிதி முன்னேற்றம் நூற்றுக்கு 30 ஆகும். | கொவிட் தொற்று நிலைமை காரணமாக ஏற்பட்ட தாமதம் மற்றும் ஆவணங்களை முறையாக புதிய இடங்களுக்கு மாற்றுவதில் ஏற்பட்ட தாமதம் என்பன காலத்தை நீடிப்பதற்கு காரணமாக அமைந்தது. | காலத்தை நீடித்ததன் பின்னர் குறிப்பிட்ட தினத்தில் வேலைகளை பூரணப்படுத்தி முடிவுறுத்துவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதுடன் துரிதமாக வேலைகளை முடிக்க வேண்டும். |
| (ii) | பொறியியல் வேலைகள் தொடர்பாக மத்திய மதியுரைப் பணியகம், மற்றும் வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியல் சேவை தனியார் கம்பனி ஆகிய நிறுவனங்களினால் திணைக்களத்திற்கு வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டுக்களை பொருத்தமான தொழில்நுட்ப உத்தியோகத்தர் அல்லது தகுதியான மதிப்பீட்டு உத்தியோகத்தரின் பரிசீலனைக்கு உட்படுத்தாமல் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | தற்போது பற்றுச்சீட்டுக்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் பரிசீலனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. | பற்றுச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் தராதரமுள்ள உத்தியோகத்தரினால் பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 287 ஆக காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்குரிய 153 ஊழியர்கள் அவ்வாறென்றால், சிரேஷ்ட நிலை பதவிகளில் நூற்றுக்கு 50 ஆகவும் மூன்றாம் நிலை பதவிகளில் நூற்றுக்கு 70 ஆகவும் ஊழியர் பற்றாக்குறை நிலவியது. இந்த ஊழியர் பற்றாக்குறையை பூரணப்படுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கின்றன. | போதுமான பதவியணியினர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |